**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 252/1995</u>**

PW2 – திரு. சின்னத்தம்பி நாள். 06.02.2026

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.J.அந்தோணி ரிஷான்தேவ், பி.பி.ஏ., எல்,எல்.,பி. (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற (இளநிலை உதவியாளர்) திருமதி.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>சாட்சி மனுவின் பெயரில் மனு அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

1. 6 முதல் 35 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1994 ம் ஆண்டிற்கு முன்பதாக தாவா சொத்தின் மதிப்பு என்னவென்றால் புஞ்சை நிலமாகும் மதிப்பு தெரியாது. மேற்படி கிரையப்பத்திரத்தை பார்த்தால் தாவா சொத்தின் அப்போதைய மதிப்பு தெரிய வரும் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு விவரங்கள் தெரியவரும் என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்த காலம் முதல் கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் கிரையப்பத்திரத்தை நாங்கள் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை, பிரதிவாதிகள் தான் தாக்கல் செய்ய வேண்டும். பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்ற விவரத்தை வாதி தரப்பில் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 6 முதல் 35 பிரதிவாதிகள் தாவா சொத்தில் எந்த இடங்களை ஆக்கிரமித்து எவ்வளவு, இடத்தில் கட்டுமானங்கள் கட்டி உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 6 முதல் 35 பிரவதிவாதிகள் ஆக்கிரமிப்பாளர்கள் என சொல்லி உள்ளதால் அவர்கள் எவ்வளவு ஆக்கிமிரப்பு செய்தார்கள் என்று சொத்து விவரத்தில் காட்டி உள்ளேனா என்றால் இல்லை. பிராது சொத்து விவரத்தில் கட்டுமான விவரங்கள் கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கட்டுமானத்தை இடிக்க வேண்டும் என கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு நாங்கள் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் மட்டும் தான் கோரி இருக்க வேண்டும் என்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதிகளிடம் உள்ளது. வழக்கானது எனது மனைவியால் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.J.அந்தோணி ரிஷான்தேவ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை